## வரி விளம்பரம்

### தேவை

எங்களுடைய பத்திரிகை புத்தகங்கள் விநியோகம் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஒரு பையன் தேவை. உடனடியாக நேரில் வந்து சந்திக்கவும். கடையில் தங்கக் கூடியவர் விரும்பத்தக்கது. ஸ்ரீ முருகன் ஸ்ரோஸ், 254, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 273

யாழ்நகரிலுள்ள வியாபார நிலையத்திற்கு ஆங்கிலம், தமிழ் இரு பாஷைகளிலும் திறமையுடையவரும், நல்ல கையெழுத்து உடையவரும் முழு நேர வேலை செய்யக்கூடியவருமான கணக்காளர் தேவை. முன் அனுபவங்களுடன் 25-10-68க்கு முன் விண்ணப்பிக்கவும். மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 274

### காணவில்லை

எனது பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப்பத்திரம் (P. A. 5-42) 2-9-68ல் கொழும்பு — காங்கேசன்துறை மெயில் ரயில் பிரயாணத்தின்போது தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர் ச. நடேசன், நகுலேஸ்வரா வித்தியாலயம், கீமலை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். 100 ரூபா இனாம் கொடுக்கப்படும். 276

### விற்பனைக்கு

தாம்பிரத்தில் வார்க்கப்பட்ட நடராஜர் விக்கிரகம் —15'' உயரம், 15 1/2 இரு— ஆலயங்களில் வைப்பதற்கு, பஞ்சளிப்பு செய்வதற்கு ஏற்றதாக சிறந்த வேலைப்பாடுடன் செய்யப்பட்டது. உடனடியாக விற்பனைக்கு இருக்கிறது. சிவ ஸ்ரீ விக்கிரகத் தொழிற்சாலை, 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 277

ஒருமுறை வாங்கியுங்கள்
பயன் அறியலாம்

'ஹய்-வீற்று' [ Hy-Vita
கோழித்தீன் Poultry Food ]

'கிறிஸ்டல்' [ Crystal
தேங்காய்எண்ணெய் Brand Coconut Oil ]


சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ள

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்

நந்தி இன்டஸ்றீஸ்
& ஏஜன்சிஸ் லிமிடெட்

20, ஸ்டான்லிவீதி. 108 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7256.

கிங்ஸ்லி பிளாஸா மைலன்
வெலிங்டன் விஜயா
(யாழ்ப்பாணம்) (மைடுநகர்)
★ எம். ஜி. ஆர். - ★ சரோஜாதேவி
அசோகன், நம்பியார், சந்திரபாபு, தங்கவேலு
இன்னும் பலர் நடித்த
ஆர். ஆர். பிக்சர்ஸ்



பறக்கும் பாவை
[ஈஸ்ட்மன் கலர்]

83-வது தினம்
லிடோ ராஜ்
(கொழும்பு) (நீர்கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக்கலர்)

### வடபகுதி பிரயாணிகள் சங்க தலைவர் கோரிக்கை

வெள்ளவத்தை, வெள்ளி தீபாவளியை முன்னிட்டு கொழும்பிலிருந்து கொடிகாமம் வந்திறங்கும் புகையிரதப்பிரயாணிகளின் வசதிக்காக கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறைக்கு நெல்லியடியூடாக மேலதிக விசேஷ பஸ் சேவைக்கு விடும்படி கோரும் கடிதமொன்றை வடபகுதி பிரயாணிகள் சங்கத்தலைவர் திரு. த. சுந்தரலிங்கம் இ. போ. ச. முகாமையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

### இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**சனி 19—10—68**

(செய்திகள்: காலை 7-00, பகல், 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீ அல் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 தமிழ்ப்பாடல்கள் 7-30 குரல்வளம், 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**844 மீ அல் 49 மீ**

பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 மாணவர் மன்றம்.

**344 மீ அல் 61 மீ**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 தொழிலாளர்வேளை, 6-45 பா வளம், 7-00 இராமசஞ்சிகை. 7-30 பாட்டு, 8-00 முல்லைத் திழ்ச்சி, 9-30 உரைச் சித்திரம், 10-00 தேர்ந்த இசை.

மனோகரா யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர்
எம். விஜயலட்சுமி
நாகேஷ்
நடித்த
சபாஷ் தம்பி

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெமினி - பத்மினி
எம். ஆர். ராதா
நடித்த
சித்தி

ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-30 மணி
ஜெமினி—சரோஜாதேவி
நடித்த
பெண் என்றால் பெண்

மானிப்பாய்
வெல்லி சினிமா
தினசரி 6-30, 9-30
3 காட்சி, பிரித்த 2-30
தீபாவளி அன்று
மு. ப. 10-30
ஜெமினி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமு

ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45
போயா, பிரிபோயா,
ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

# ரூ. 1லட்சத்துக்கு மேல் லாபம்

வட்டுக்கோட்டை. வெள்ளி வலி மேற்கு பலநோக்கக் கூட்டுறவு சங்க சமாஜம் 1968-ம் நிதி ஆண்டில் நல்ல இலாப மடைந்துள்ளதாக புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. 31-3-68-ல் முடிவான நிதி ஆண்டில் சமாஜம் ஒரு லட்சத்து முப்பதினாயிரம் ரூபாவை சுத்த லாபமாகப் பெற்றுள்ளது.

இச் சமாஜம் 1967-ம் ஆண்டில் 72 லட்சம் ரூபாவுக்கு விற்பனை நடத்தியுள்ளது. ஆனால் 1968-ம் வருடத்தில் இதன் விற்பனை 62 லட்சம் ரூபாவாகக் குறைந்துள்ளது. விற்பனை வீழ்ச்சிக்கும் காரணம் பங்கீட்டரிசி இலவசமாகக்கப்பட்டதும் இறக்குமதிக்கட்டுப்பாடும் தான் எனத் தெரிவிக்கப்பட்டது. விற்பனை வீழ்ச்சி சமாஜம் பெற்ற லாபத்தைப் பாதிக்கவில்லையாம்.

### கல்லுண்டாய் உப்பளத்தில் நஷ்டம்

வட்டுக்கோட்டை, வெ. கல்லுண்டாய் உப்பளத்தில் 4-4-67-ல் முடிவான நிதியாண்டில் 88,137 சுத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம். 1968-ம் வருட நிதிஆண்டின் இலாபநஷ்டக்கணக்கு இன்னும் வெளியிடப்படவில்லை.

### தலைவர்களை சந்திப்பர்

யாழ்ப்பாணம், சனி வடபகுதி வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தூதுகோஷ்டியொன்று இன்று தமிழரசுக் கட்சித் தலைவர் திருஎஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தையும் சந்தித்து தங்கள் கோரிக்கைகளை எடுத்துக் கூறுவார்கள்.

### கூட்டுபிரார்த்தனை சபை நிர்வாகிகள்

வர்சாவற்றுறை: வெள்ளி

சரவணை கிழக்குப்பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் புதிய செயலாளராக செல்வன் சி. குணரெத்தினம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஈழநாடு
தினக்குறிப்பு
1969

| FEBRUARY 1969—தை லேக | |
|---|---|
| 2 Sunday<br>20 ஞாயிறு<br>போயாவின் பின் 1-ம் நாள்<br>தைப்பூசம்<br>பூரண விரதம்<br>காணிக்கைத் திருநாள் | |
| 3 Monday<br>21 திங்கள்<br>போயாவின் பின் 2-ம் நாள் | |

அழகிய கடதாசியில்
வழமைபோல்
சகல விபரங்களுடனும்
தயாராகிக்கொண்டிருக்கிறது.

விற்பனையாளர்கள் பொதுமுகாமையாளருடன்
தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷியாவில் மாணவர் கலவரம்

## சிங்கப்பூர் தூதரகம் மீது தாக்குதல்

ஜகார்த்தா, ஒக். 18

சிங்கப்பூரில் இரண்டு இந்தோனேஷியப் போர் வீரர்கள் மரணதண்டனை நிறைவேற்றப் பட்டதை அடுத்து, இந்தோனேஷியாவில் கலவரங்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்றுச் சுமார் 400 இந்தோனேஷிய மாணவர்கள், சிங்கப்பூர் தூதரகத்தைத் தாக்கி, அதன் ஜன்னல்களை அடித்து நொருக்கினர். தூதரகத் தஸ்தாவேஜுகளையும் தெருக்களில் வீசி எறிந்தனர். பின்னர், இந்தோனேஷியத் துருப்புகள் அவசர அவசரமாகச் சிங்கப்பூர் தூதரகத்துக்குச் சென்று, மாணவர்களைக் கலைத்து அமைதியை நிலைநாட்டினர்.

சிங்கப்பூரிலிருந்து வந்த இரண்டு இந்தோனேஷிய வீரர்களினதும் சடலங்கள், இராணுவ மரியாதையுடன் விமான நிலையத்திலிருந்தும், ஆயிரக்கணக்கான மக்கள் புடைசூழ, ஊர்வலமாக வந்துகொண்டிருந்தபோதே மாணவர்களின் கலவரங்கள் ஆரம்பமாகின.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இரு வீரர்களுக்கும் இந்தோனேஷியாவின் மிக உயர்ந்த இராணுவ விருது வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இரு சடலங்களும் முழு இராணுவ மரியாதைகளுடனும் அடக்கம் செய்யப்படவிருக்கின்றன.

## அஸ்ஸாமில் மிஸோ கலகக்காரர் 1250 க்கு மதிகமானோர் சரண்

ஷில்லொங், ஒக். 18

அஸ்ஸாமில், 1250க்கு மதிகமான மிஸோ தேசிய முன்னணியைச் சேர்ந்த மிஸோ கலகக்காரர் தமது ஆயுதங்கள், வெடி மருந்துகளுடன் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையிடம் கடந்த 6 வாரகாலத்தில் சரணடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேலும் பல மிஸோ கலகக்காரர்கள் பாதுகாப்புப் படையிடம் சரணடைய முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமவாசிகளுக்கு பாதுகாப்புப் படையினர் முழுப் பாதுகாப்பு அளித்துவருவதைத் தொடர்ந்து, கலகக்காரர்களுக்குக் கிராமவாசிகளின் ஆதரவு நிச்சயமற்றிருப்பதால் மனமுடைந்த கலகக்காரர், இப்போது இவ்விதம் சரணடைய முன்வருவதாகவும் கூறப்படுகிறது.

## ரொடீஷியப் பார்லிமெண்டில் பிரிட்டிஷ் திட்டம் விவாதம்

### மேலும் 2 அம்சங்களுக்கு திரு. அயன் ஸ்மித் எதிர்ப்பு

ஸலிஸ்பரி, ஒக். 18

ரொடீஷியப் பார்லிமெண்டில் நேற்றுநடைபெற்ற அவசர கூட்டமொன்றில், ரொடீஷியப் பிரச்னைக்கான பிரிட்டிஷ் தீர்வுத்திட்டத்தில் மேலும் இரண்டு அம்சங்கள் பற்றி ரொடீஷியப் பிரதமர் திரு. ஸ்மித், பிரிட்டனிடம் விளக்கம் கேட்டுள்ளார்.

அந்த இரண்டு அம்சங்களாவன: ஒன்று, ஆபிரிக்க குடிமக்களிடமிருந்து தமக்குக் கீழுள்ள உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை! இரண்டு, ஆபிரிக்கர்களடங்கிய பரவலான அரசாங்கம் உருவாக்குவது.

முன்னதாக, ரொடீஷியாவில் இயற்றப்படும் இனஒதுக்கல் சம்பந்தமான அப்பீல்களுக்கு பிரிட்டிஷ் பிரிவி கவுன்ஸிலே கடைசி அதிகாரம் வாய்ந்த நீதிமன்றம் என்ற பிரிட்டிஷ் திட்டத்தின் மற்றொரு அம்சத்தையும் ரொடீஷியப் பிரதமர் திரு. ஸ்மித் எதிர்த்திருந்தார்.

### ஆபிரிக்கத் தலைவர் எதிர்ப்பு

இது இப்படியிருக்க, ரொடீஷியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஆபிரிக்க தேசிய இயக்கங்களின் தலைவர்கள், பிரிட்டிஷ் சமரசத் திட்டத்தை, ஆபிரிக்க மக்களை வெள்ளையருக்கு அடிமைப்படுத்த வழிவகுக்கும் திட்டமெனக் கண்டித்துள்ளனர்.

ஸாபு ஸானு என்ற இந்த இரண்டு ஆபிரிக்கத் தேசிய இயக்கங்களும், ரொடீஷியாவுக்கு எதிராகத் தாம் தொடர்ந்து கெரில்லாப் போராட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளன.

பிரிட்டிஷ்

## மந்திரி சபையில் இரு பெண்கள்

லண்டன், ஒக். 18

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸன் செய்துள்ள மந்திரிசபை மாற்றங்களின் பயனாக புதிய மந்திரி சபையில் இரண்டு பெண்மணிகள் மந்திரிசபை பதவி ஏற்றுள்ளனர்.

இரண்டு பெண் மந்திரிகள் பிரிட்டிஷ் மந்திரி சபையில் ஒரே சமயத்தில் கடமையாற்றுவது இதுவே முதற்தடவையாகும்.

புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பெண் மந்திரி திருமதி ஜூடித் ஹாட்டுக்கு வயது 34 ஆகும். வேறு பல பொறுப்புகளுடன் சிவில் சேவை, இளைஞர் நலன், பொதுஜன உறவுகள் ஆகிய பொறுப்புகளும் இவரது அமைச்சின் கீழ் வருகின்றன.

மந்திரி சபையில் ஏற்கனவே உள்ள பெண் மந்திரி, திருமதி போஸல் என்பவராவர்.

## ஜமெக்காவில் ஆர்ப்பாட்டம்

கிங்ஸ்டன், ஒக். 18

ஜமெய்க்காவில் கானாப் போதனாசிரியரொருவரை அந் நாட்டினுள் மீண்டும் வருவதற்கு ஜமெய்க்கா தடைவிதித்ததைத் தொடர்ந்து கிங்ஸ்டனில் நடந்த ஆர்ப்பாட்டங்கள் இப்போது அடக்கப்பட்டு விட்டதாகவும் அங்கு அமைதி நிலவுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கானாப் போதனாசிரியர் கிங்ஸ்டனிலுள்ள மேற்கு இந்தீஸ் பல்கலைக் கழகமொன்றில் கடமையாற்றி வந்தவராவர். இவர் திரும்பி ஜமெய்க்கா வருவதை அரசாங்கம் தடை செய்ததைத் தொடர்ந்து கடந்த புதன் கிழமை மாணவர் கலவரங்கள் நடைபெற்றன.

போதனாசிரியருக்குத் தடை விதித்ததற்கான காரணம் அவர் கறுப்பு ஆதிக்க இயக்கத்துக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ததேயாகும் என்று ஜமெய்க்காப் பிரதமர் விளக்கம் கொடுத்துள்ளார்.

## யூகோ. தலைநகரில் அமெரிக்க உதவி ராஜாங்க காரியதரிசி

பெல்கிரேட், ஒக். 18

அமெரிக்க உதவி ராஜாங்கக் காரியதரிசியான ஒருவர், யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேடுக்கு வந்து சேர்ந்துள்ளார்.

அவர், அமெரிக்க ஜனாதிபதியின் பிரதிநிதியாக, யூகோ. ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவுடன் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

1963-ல் பெல்கிரேடுக்கு அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன்ரஸ்க் விஜயம் செய்ததையடுத்து அமெரிக்காவிலிருந்து யூகோஸ்லாவியா வரும் முதலாவது உயர் ராஜாங்க அதிகாரி இவரேயாவர்.

யூகோஸ்லாவியா மீது ரஷ்யாவினால் செலுத்தப்பட்டு வரும் நெருக்குதலின் பின்னணியில், அந்நாட்டுப் பாதுகாப்பு, சுதந்திரம் இவற்றில் அமெரிக்காவுக்குள்ள அக்கறையின் வெளிக்காட்டாகவே இந்த அமெரிக்கப் பிரதிநிதி வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## இலங்கைப் புகையிலைக்கு பிரிட்டனில் கிராக்கி

வட்டுக்கோட்டை, வெள்ளி

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சிகரெட் புகையிலைக்கு பிரித்தானியாவில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதுவரை தமக்குத் தேவையான சிகரெட் புகையிலையை பிரித்தானியர் ரொடீஷியாவிலிருந்து பெற்றுவந்தனர். அந்நாட்டுடனான வியாபாரத் தொடர்பு துண்டிக்கப்பட்டமையால் பிரித்தானியர் தமது புகையிலைத் தேவைக்கு வேறு நாடுகளை நாடியுள்ளனர்.

இலங்கையில் உற்பத்தியாகும் சிகரெட் புகையிலையை பிரித்தானிய மக்கள் விரும்பும் காரணத்தால் இதுவரை 10லட்சம் இறாத்தல் சிகரெட் புகையிலைக்கு இவ்வாண்டு இறக்குமதியாளர்களிடமிருந்து மனுக்கள் கிடைத்துள்ளனவாம். சென்ற ஆண்டிலும் பார்க்க இது நாலு இலட்சம் இறாத்தல் அதிகரித்துள்ளது.

அத்துடன் இதன் மூலம் இலங்கைக்கு அறுபது லட்சம் ரூபா வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கிறது.

## சங்கிலி திருடியதாக வழக்கு

வல்வெட்டித்துறை, வெள்ளி

கரணவாய் மடக்கைச் சேர்ந்த த. நடராஜா என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். மாணிக்கத்தின் ரூபா 520 பெறுமதியான சங்கிலியை திருடியதாக பொலிசாரால் குற்றம் சாட்டு தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வீரராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 700 பிணையில் செலுத்துமாறும் மீண்டும் அடுத்த மாதம் 1-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும் படியும் கட்டளையிட்டுள்ளார்.

## மீண்டும் பொலிஸ்பாதுகாப்பு

வல்வெட்டித்துறை வெள்ளி

பருத்தித்துறையைச் சேர்ந்த எம். பாலகிருஷ்ணன் என்பவருக்கு கொழும்பு நீதிமன்றம் அவரின் குற்றத்திற்காக 6 மாத சிறைத்தண்டனையுடன் இரண்டு வருட பொலிஸ் பாதுகாப்பும் விதித்து தீர்ப்பளித்திருந்தது.

எதிரியானவர் சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டு பொலிஸ் பாதுகாப்பின் நிபந்தனைகளுக்கு சமூகமளிக்கத் தவறவே பருத்தித்துறை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மாஜிஸ்திரேட் திரு. கே. வீரராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 500 பிணையில் ஒருவருடபொலிஸ் பாதுகாப்பில் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

## வெடிமருந்து வைத்திருந்தாராம் ரூ. 300 அபராதம்

வல்வெட்டித்துறை வெள்ளி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொ. சிவகுரு என்பவர் அனுமதியின்றி 108 இரு அபாயகரமான வெடி மருந்து வைத்திருந்ததாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வீரராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே மாஜிஸ்திரேட் எதிரிக்கு 300 அபராதம் விதித்துள்ளார்.

## பல்கலைக்கழக இந்து மாணவர் முயற்சி

கண்டி, வெள்ளி

பேராதனை பல்கலைக்கழக நாடகப்போட்டியில் முதற் பரிசு பெற்ற வாணி நவரச மன்றத்தின் "அவனுக்கென்ன தூங்கிவிட்டான்", "முதற்பலி" ஆகிய இரு நாடகங்களையும் இலங்கை பல்கலைக்கழக முருகன் கோவில் கட்டட நிதிக்காக நவம்பர் 19-ந் திகதியன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை பேராதனை பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் செய்து வருகின்றது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

பூநகரி — சித்தன்குறிச்சி இளைஞர் முன்னேற்றச்சங்க புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். பாலசுப்பிரமணியம், உபதலைவர்: வீ. லோகராஜா, செயலாளர்: கே. சிவபாதம், உபசெயலாளர்: எஸ். கனகசபை, பொருளாளர்: கே. செகராசசிங்கம், உபபொருளாளர்: எஸ். குலவீரசிங்கம்.

பத்துப் பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. [ந.நி.]

இன்னும் சில தினங்களில்

## வட வியட்நாம் குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்துவது ஓரளவு நிச்சயம்

### பாரிஸ் பேச்சுக்களிலும் புதிய கட்டம்

வாஷிங்டன், ஒக். 16

அமெரிக்கா வடவியட்நாம் மீதான குண்டுவீச்சை முற்றாக நிறுத்தப்போவதென்பது இப்போது மேலும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுவருகிறது.

குண்டுவீச்சை நிறுத்தும் அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன், இன்னும் சிலதினங்களில் வெளியிடுவார் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், ஜனாதிபதியின் இந்த அறிவிப்புத் தாமதமாவதற்குக் காரணம் குண்டுவீச்சை நிறுத்தியபின் ஹனோய் என்ன பதில் நடவடிக்கை எடுக்குமென்பது பற்றிய உறுதி எதுவும் இதுவரை கிடைக்காததேயாகும் என்று சொல்லப்படுகின்றது.

### பாரிஸில்

இதற்கிடையில்: பாரிஸில் நடைபெறும் பூர்வாங்க வியட்நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒரு புதிய கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அமெரிக்க வடவியட்நாம் பிரதிநிதிகள் கோஷ்டிகள் நேற்றும் சுமார் ஒருமணிநேரம் விவாதித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், இவர்களது பேச்சுவார்த்தை விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 21—10—68 திங்கட்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் 22ந் திகதி செவ்வாய்க்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவர மாட்டாது.

### மணிவாக்கு

சிறுபான்மையினருக்குச் செவிசாய்த்து, அவர்களை ஒவ்விதத்திலும் அமைதிக்காகப் பார்த்துக்கொள்வது பெரும்பான்மையினரின் கடமையாகும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

சனிக்கிழமை கீலக வருடம் ஐப்பசி மாதம் 3-ந் திகதி
(19-10-68)

## ஒருமைப்பாடு

தவத்திரு குன்றக்குடி அடிகளார் யாழ்ப்பாணத்திலே மகாத்மா நூற்றாண்டு ஜயந்தி விழாக் கூட்டத்தில் பேசுகையில், ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்குமுள்ள வேற்றுமையைப் பற்றி விளக்கினார். ஒரே மொழியை எல்லாரும் பேசுவதால் ஒருமைப்பாடு ஏற்பட்டுவிடலாமென்று சிலர் கருதுகின்றனர். ஒரே மொழி பேசும் தமிழர்களுக்கிடையே ஒருமைப்பாடு இருக்கிறதா? என்று பலத்த கரகோஷத்தினிடையே அடிகளார் கேட்டார்.

ஒரே மொழி பேசும் தமிழர் மத்தியில் மட்டுமல்ல, ஒரே மொழி பேசும் சிங்களவர் இடையிலும் விரும்பத்தக்க ஒற்றுமையில்லை. பலபல கட்சிகளும், கோஷ்டிகளும் கிளம்பி, போட்டாபோட்டிகள் அதிகமிருப்பதைப் பார்க்கிறோம். அடிகளார் கூறியதுபோல் கேவலம் மொழி மட்டும் ஒற்றுமையை ஏற்படுத்தவில்லை. அதேபோல் சமய விஷயத்தையும் கூறலாம். ஒரே சமயத்தவரிடையிலும், ஏன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளும்கூட, வெகுவாக ஒருமைப்பாடு இருக்கிறதா? இல்லை என்பது அனுபவ உண்மை. நாட்டிலுள்ளோர் அனைவரும் ஒரே மொழி பேசி, ஒரே மதத்தைப் பின்பற்றினால் தேசிய ஒருமைப்பாடு ஏற்பட்டுவிடுமென்று சிலர் கூறி, மற்ற மொழிகளையும், மதங்களையும் அடக்க முற்படுவது எவ்வளவு தவறான விபரீதமான வேலை என்பது தெளிவு.

ஒருமைப்பாடு ஏற்படவேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கமுடியாது. ஆனால் அதை எப்படி ஏற்படுத்துவதென்பதே கேள்வி. உள்ளத்து உணர்ச்சியாலேயே ஒன்றி, உண்மையான ஒருமைப்பாடு ஏற்படலாமென்கிறார் அடிகளார். பிறர்மீது துவேஷத்தைக் கிளப்பி, ஒரு சாரரிடையே இன, மத, மொழி, சாதி ஒருமைப்பாடு ஏற்படச் சில அரசியல்வாதிகள் முற்பட்டு, தேர்தலில் அதிக வாக்குகள்பெற்று வெற்றிபெற முனைவதைப் பார்க்கின்றோம். மக்களிடையே மொழி, இனம், மதம், சாதி முதலிய வேற்றுமைகளைக் கிளப்பி, அதன் மூலம் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதால் நாட்டின் அமைதி கெட்டு, நாடு முன்னேறமுடியாமல், ஜனநாயகமே சீரழிகின்றது. சென்ற இருபதாண்டு சுதந்திரத்தில் நாம் கண்ட பலன் இதுதான். இப்போது நாட்டிலுள்ள நிலைமை, இதே போக்கில்தான் செல்லுகின்றது. ஜனநாயகம் வெற்றிபெறுமென்ற நம்பிக்கைக்கான எவ்வித அறிகுறியும் காணவில்லை.

நாட்டின் அரசியல் விடுதலைக்காக மக்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்த, சர்வ சமயக் கூட்டுப் பிரார்த்தனை முறையைக் கையாண்டார் காந்தி அடிகள். அவருக்குப் பின் அநேகமாக அது மறைந்துவிட்டது. மீண்டும் அம்முறையை வெற்றிகரமாகக் கையாளக் கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தோன்றவில்லை. பொதுமக்களின் உணவு, உடை, குடியிருப்பு முதலிய தேவைகளை அன்பு முறையில் பூர்த்திசெய்யும் அடிப்படையிலேதான் ஒருமைப்பாடு ஏற்படக்கூடியதாக இருக்கும். 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார் மகாகவி பாரதியார். 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்' என்று முழங்கினார் திருவள்ளுவப் பெருந்தகை. ஆனால் இன்று நம் சமூகத்தின் நிலைமை என்ன? வேலையில்லாக்கஷ்டம், பட்டினிச் சாவு இவைதான் பலரையும் பொதுவாகப் பயமுறுத்துகின்றன. இதைத் தீர்க்கமுடியாமல் பல அரசாங்கங்களும் திகைக்கின்றன.

அரசாங்கத்தால் மட்டும் இதைத் தீர்ப்பதென்பது முடியாத காரியம். பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். பல சமயங்களுக்கும் பொது அடிப்படை, அன்பு. ஆனால் அன்பு வெறும் பேரளவில், உதட்டளவில் தானுள்ளது. சுயநலமும் பேராசையும் தலைதூக்கியுள்ளன. எல்லா உயிர்களிலும் இறைவன் உள்ளான் என்பதையும், மக்கள் சேவையே மகேசன் பணி என்பதையும் அடிப்படையாகக்கொண்டு மக்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கூடுமானவரை பூர்த்திசெய்யப் பொதுமக்களும், அரசாங்கமும் ஒத்துழைப்பதன் மூலமே விரும்பத்தக்க ஒருமைப்பாடும், அமைதியும், சுபீட்சமும் ஏற்பட முடியும்.

## இடமாற்றம் ரத்து

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் கிராமசபை சேவகராகக் கடமையாற்றிய பி. பி. அரியநாயகத்தின் இடமாற்றம் கிராமசபையின் முயற்சியால் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

## 2-ம் தரத்திற்கு உயர்வு பெற்றார்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மின்சார நிலையத்தில் 'லைன்ஸ்மன்' ஆகக் கடமையாற்றும் திரு. கே. கே. ராமஜாகிரி உள்ளூராட்சிமன்றங்கள் சேவைக்கமிஷனால் நடாத்தப்பட்ட 2-ம் தர பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

### காந்திஜியின் பேரா[...]

# "ஒருகுடும்பம்போல் ஒ[...] எடுத்துக்காட்டாக[...]

## நூற்றாண்டு விழாவில் செனட்சபைத் தலைவரின் உருக்கமான அழைப்பு

நாம் சுதந்திரமடைந்து இருபது வருடங்களாகின்றன. ஆனால் இன்னும் இனப்பிரச்சினை தீர்ந்தபாடில்லை. தமிழர்கள் அதிருப்தியடைந்த நிலையிலிருக்கிறார்கள். காந்தி நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்த ஆண்டிலாவது காந்திஜியின் தத்துவங்களின் அடிப்படையில் இந்தப்பிரச்சினைகளையெல்லாம் நாம் தீர்த்துவிடமுடியும். நம்நாடு பல மதங்களையும், பல மொழிகளையும், பல இனங்களையும் கொண்டதாகவிருக்கின்றது. நாமெல்லோரும் ஒரு குடும்பம்போல் இணைந்து, சகோதரத்துவத்தின் அடிப்படையில், ஒருவன் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் வாழும்நிலை உருவாகி உலகத்துக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற காந்தி நூற்றாண்டு விழாவில் சிறப்புரை நிகழ்த்துகையில் செனட்சபைத் தலைவரும் காந்திய நூற்றாண்டு கொண்டாட்டங்களின் தேசிய சபைத் தலைவருமான திரு. ரத்தினாயக்கா மேற்கண்டகருத்தை வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் சமூக சேவைகளுக்கு பெயர்போனது. பெரும் சிந்தனையாளர்களையும், சட்டவல்லுனர்களையும் சிறந்த அறிஞர்களையும் யாழ்ப்பாணம் நாட்டுக்கு உருவாக்கித்தந்திருக்கின்றது. நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு யாழ்ப்பாணம் பெருமளவில் உதவியிருக்கிறது' என்று திரு. ரத்னாயக்கா கூறினார்.

காந்தி நூற்றாண்டு கொண்டாடப்படுவதின் நோக்கம் அவரது தத்துவங்களை உலகுக்கு உணர்த்துவதே. இன்று 77 நாடுகள் காந்தியின் தத்துவங்களை ஏற்றுக்கொண்டு நூற்றாண்டு கொண்டாட்டங்களில் கலந்து கொள்கின்றன என்றார் அவர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

எந்தச் சமயத்தவர்களும் தமக்கென உரிய சமயக்கடமைகளைச் செய்கிறார்கள். பௌத்தர்கள் பன்சில் அனுஷ்டிப்பது போல் இந்துக்களும் மந்திரம் சொல்கிறார்கள். இதெல்லாம் நல்ல பழக்கங்கள். நல்ல பழக்கங்கள்தான் மனிதனின் புருஷத்தன்மையை உருவாக்குகின்றது. காந்திஜி உலகுக்கு விடுத்த செய்தி இமாலயத்தைப்போல் பெரியது. அது இன்றைய மனிதசமுதாயத்துக்கு முக்கியமாக தேவைப்படுகின்றது. காந்திஜி மறைந்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று ராணுவ மரபுகள்தான் உலகில் இடம் பெற்றுவருகின்றன. குறி[...]

## காந்தியகொள்கைக்குநம்மை அர்ப்பணிப்போமாக

பின்வரும் தீர்மானம் நேற்று முன்தினம் நடைபெற்ற காந்தி விழாவில் நிறைவேற்றப்பட்டது,

சமய ஆசாரியர்கள் அனைவரும் சத்தியம், சாத்வீகம் சாந்தி ஆகியவற்றை உலகிற்கு ஈந்தார்கள். மனிதர் பிரச்னைகளுக்குத்தீர்வு காண்பதில் இக்கொள்கைகளை பெருவெற்றிகிடைக்கும் வகையில் போதித்தும் அவற்றைவழிநடத்திக் காட்டியவரும் இந் நூற்றாண்டின் மாபுருடர்களில் ஒருவருமாகிய மகாத்மா காந்தியின் பிறந்த நூற்றாண்டை கொண்டாடுவதற்கு இலங்கையிலுள்ள நாம் ஆயத்தமாகும் இவ்வேளையில் இக் கொள்கைக்கு எம்மை அர்ப்பணிப்போமாக. நல்லெண்ணம் அடுத்தவரைப் புரிந்துகொள்ளல் ஆகிய சக்திகளைக் கட்டவிழ்த்துவிடுவதன் மூலம் யுத்தங்களையும் முரண்பாடுகளையும் முற்றாகஒழித்துவிடவேண்டுமென்பதே மனிதஇனத்தின் சிந்தனையில் இன்று மேலோங்கிநிற்கும் எண்ணமாகும்.

இசைவு, தூண்டுதல் பேச்சுவார்த்தை, பரஸ்பர இடமளிப்பு, அடுத்த[illegible] [illegible] வை மூலம் சாதிக்க முடியாதவை எவையுமே இல்லை என்பதில் எமது நம்பிக்கை மிக ஆழமானது.

மனித இனம் தப்பிப்பிழைக்க வேண்டுமென்ற கருத்துடன் இசைவுபெறும் ஒரேயொரு தத்துவமான கோட்பாடு அவ்வினம் அனைத்தினதும் ஒற்றுமையேயாகும். மகாத்மாவிற்கு அர்ப்பணிக்கும் இந்த ஆண்டில் இக்கோட்பாட்டை எமது வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு பயமின்றியும் உறுதியுடனும் நாம் அதைப் பின்பற்றுவோமாயின் 'ஒரே உலகம்' அதுவும் பூசலற்ற ஒரே உலகம், என்ற எமது கனவு நனவாகும் நாள் மிக அண்மையில் வந்துவிடும், இலட்சியக் கண்ணுக்கெட்டிய எதிர்காலத்தில் நாம் அவ்வுலகத்தை அடையவும் முடியும்.

இந்தச் சங்கற்பம் உலகத்தின் மூலை முடுக்குகள் அனைத்திலும் பறைசாற்றப்படுவதாக. மனித இனத்தின் மீட்சிக்கு வழி எது என்பதை ஒவ்வொரு தனி மனிதனும் காத்திரமாக பரிசீலிப்பானாக. எமது மனச்சாட்சியின் குரலுக்கு செவி சாய்க்கும் வகையில் மனக் கசப்பு, [illegible], வெறுப்பு ஆகியவை அனைத்தையும் புறக்கணித்து நடப்போமென உறுதி பூணுவோமாக. மனித இனச் சட்டத்தின் ஆட்சியை நிறுவவும் உறுதிப்படுத்தவும் எம்மைத் தூண்டும் குரலுக்குச் செவிமடுத்து நடப்போமெனச் சபதம் கொள்வோமாக. இம்மனித இனச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மதிப்பளிக்கப்படவேண்டும். ஒரு நாட்டின்மீது இன்னொரு நாடு தலையிடாது எல்லா நாட்டினங்களும் ஒன்றுக்கொன்று இணையானவையாக உடனிருந்து வாழும் ஓர் உலக ஏற்பாட்டை எடுத்துக் கூறுவதும் வலியுறுத்துவதும் இம்மனித இனச் சட்டத்தின் நோக்கமாயிருக்கும். இத்தகைய சூழ்நிலையில் நிறத்தின் அடிப்படையிலோ கோட்பாட்டின் அடிப்படையிலோ பல்வேறு மக்களிடையே வேறுபாடு எதுவும் காட்டாது எல்லா நாட்டினங்களும் எல்லோரினதும் பொது நலத்திற்காகப் பணியாற்றும் நோக்கமாகவும் இருக்கும்.

[காநி]

## ஒற்று[...] அடி[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

— நமது விளையாட்டு நிருபர் 'தேவா' —

யாழ்ப்பாணம், சனி

யாழ். பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் கல்லூரிகளிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும், வேலணை மத்திய மகாவித்தியாலய போட்டியிட்டன. இப்போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டியின் விளையாட்டும் ரசிப்பாகவே காணப்பட்டது.

இடைவேளையின் போது கனகரத்தினம் ம. மா. வித்தியாலயம் 1—0 கோலைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் கனகரத்தினம் ம. மா. வித்தியாலயக் கோஷ்டியைச் சேர்ந்த ருபூடீன், குலேந்திரராசா, கைலேஸ்வரன் ஆகியோர் முறையே 2,1,1 கோல்களைப் போட்டனர். ஆட்டம் முடியும்போது கனகரத்தினம் ம. மா. வித்தியாலயம் வேலணை ம. மகா வித்தியாலயத்தை 4—1 கோல்களால் தோற்கடித்தது. யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. வி. ரி. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

### கனகரத்தினம் ம. மா. வி. வெற்றி

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும், வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இருபிரிவுகளிலும் கனகரத்தினம் ம. மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது.

முதலில் நடைபெற்ற "சி" பிரிவுப்போட்டியில் கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம் 3—0 கோல்களால் வைத்தீஸ்வராக் கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. வி. ரி. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

இரண்டாவது நடைபெற்ற "ஏ" பிரிவுப் போட்டியில், கனகரத்தினம் ம. மா வித்தியாலயம் மிகவும் திறமையாக விளையாடி வைத்தீஸ்வராக் கோஷ்டியை 4-1 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. ராசதுரை மத்தியஸ்தம் வகித்தார்.

### மத்திய கல்லூரி வெற்றி

யாழ். மத்திய கல்லூரிக்கும், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்குமிடையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில், யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

முதலில் நடைபெற்ற "சி" பிரிவுப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வைத்தீஸ்வர வித்தியாலயத்தை 1—0 கோலால் வெற்றிபெற்றது.

இரண்டாவது நடைபெற்ற "பி" பிரிவுப்போட்டி ரசிப்பாகவே காணப்பட்டது. இருகோஷ்டியினரும் கோல்கள் எதுவும் போடாத நிலையில் ஆட்டம் சமமாக முடிவுற்றது.

[தே. நி.]

## ஸ்டார் வென்றது

உடுவில், வெள்ளி

உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் சுதுமலை வடக்கு இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் உடுவில் ஸ்டார் கோஷ்டி 5—2 கோல்களால் சுதுமலைக்கோஷ்டியை வெற்றிபெற்றது.


உடுவிலில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிக்கு திரு. எம். சண்முகலிங்கநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## தபால்பைகளை களவாடினார்களாம் தீர்ப்பு 24ம்திகதி

கண்டி, வெள்ளி

தபால்பைகளைக் களவாடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கொன்றில் 2ம், 3ம், எதிரிகளுக்கு தீர்ப்பளிப்பதை இம்மாதம் 24ந் திகதிக்கு ஒத்திவைத்தார் [illegible] மாஜிஸ்திரேட் திரு. [illegible].

இவ்வழக்கில் கொழும்பு கொம்பனி தெருவைச் சேர்ந்த ஜே.பி. தனபாலா மருதானை ஆர். எம். டிக்கிரி பண்டா, கிரிபிட்டிவெல, என். பி. குணவர்த்தன ஆகியோர் கடந்த மாதம் 9ம் திகதி ரவஹ உபதபாற்கந்தோர் கே. விஜயசிங்கா என்பவரிடமிருந்து பணம், தங்கம், மோதிரம், மணிக்கூடு ஆகியவற்றைக் [பெறுமதி ரூ774] களவாடியதாக குற்றஞ்சாட்டப்பட்டு இவ்வழக்கு தொடரப்பட்டது.




## ...மேலும் உறுதியாய் உழைக்க வல்லது!

இதோ உறுதிக்கு உயர்ந்த உதாரணம். 1100 றாத்தல் எடையுள்ள வலுவான கடும் தாக்கத்தைச் சுளுவாகத் தாங்கிய பின்னரும் அதிக வன்மைச் சக்தியுடன் உழைக்க வல்லது எஸ்-லோன்!

எஸ்-லோன் பூரண உறுதி வாய்ந்தது மட்டுமன்று. அது நீடித்துழைப்பது; தீப் பாதிப்பற்றது; சுவாத்தியத்துக்கும் ரசாயனப் பொருள்களுக்கும் தாக்குப் பிடிப்பது; இலகு பாரமுடையது. அத்துடன், அதைச் சுலபமாகவும் சுருக்கச் செலவுடனும் பொருத்திவிடலாம்.

உறுதியான எஸ்-லோன் பீவீசீ குழாய்களும், மழை நீர்ப்பீலிகளும், இணைப்புகளும், அவற்றை முதலில் உருவாக்கியவர்களான மெசர்ஸ் சக்கிசூயி கெமிக்கல் கம்பனி லிமிட்டெட் என்னும் ஜப்பானிய நிறுவனத்தின் இணைப்புடன், அதி சிறந்த ஒப்பற்ற தரக் கட்டுப்பாடுகளுக்கிசையத் தயாரிக்கப்படுகின்றன.

S-lon

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஓர்கனிசேஷன் லிமிட்டெட்

maharaja organisation

P 78

Digitized by Noolaham Foundation..
noolaham.org | aavanaham.org

## 77 வயதில் அசிட் வீசியவருக்கு 9 மாத சிறை

காலி, வெள்ளி

"இந்த மாதிரியான குற்றத்துக்கு நான் இரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்திருப்பேன். ஆனால் உமக்கு வயது 77 ஆகவிருப்பதால் 9 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கிறேன்." இவ்வாறு காலி மாவட்ட நீதிபதி திரு. டி. பி. திசநாயக்க உடுகம நேற்றைச் சேர்ந்த 77 வயதான வில்லியம் சில்வா என்பவருக்குத் தீர்ப்பு வழங்குகையில் தெரிவித்தார்.

வில்லியம், அதே கிராமத்தைச் சேர்ந்த டி. ஜி. ஆரியசேன என்பவருக்கு இந்த வருடம் மே மாதம் 20ந் தேதி அசிட் வீசியதாகவும் அதனால் ஆரியசேன இரு கண்களையும் இழக்க நேரிட்டதாகவும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## "தமிழர் என்ற ரீதியில் மாணவர் இயக்கம் தேவை"

### தமிழக மாணவபேரவைத்தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், சனி

"இலங்கையில் தமிழர் என்ற ரீதியில் மாணவர் இயக்கம் ஒன்று உருவாக வேண்டும். மலேசியா, தென்னிந்தியா மற்றும் நாடுகளில் உள்ள தமிழ்மாணவர் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு, பல பிரச்னைகளைத் தீர்க்கலாம்."

தமிழக மாணவ பேரவை தலைவர் திரு. இரா. ஜனார்த்தனம் விமான நிலையத்தில் வடபகுதி வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் நேற்றுக்காலை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத்தேநீர் விருந்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கலந்து கொண்டார். பட்டதாரிகளின் நிலைமை பற்றி திரு. ஜனார்த்தனனுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

திரு. ஜனார்த்தனம் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் உருவாகும் மாணவர் இயக்கம், உலக மாணவர் இயக்கங்களுடன் ஒன்றுபடவேண்டும். மாணவர் இயக்கம் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக விளங்க வேண்டும். அப்படியானால்தான் தமிழ் பிரச்னைகளை மட்டுமன்றி நாட்டின் பிரச்னைகளையும் தீர்க்கலாம். கலை, கலாச்சாரங்களையும் மாணவர்கள் வளர்க்கலாம்.

## வேறுபாடுகளை மறந்து ஒன்றுபடவேண்டும்

### தமிழினம் முன்றே அதுவே வழி

யாழ்ப்பாணம், சனி

"மனம் உருகினால் வாழ்க்கை செம்மைப்படும். மனத்தை உருக்கக் கூடிய மகத்தான சக்தி படைத்தது திருவாசகம். திருக்குறள் ஓர் அறிவியல் நூல். அது வாழ்க்கை நெறிகளை முறைகளைக் கூறுகிறது. ஆனால் திருவாசகம் நம்மை நெறிப்படுத்துவதோடு அருளற்ற கருங்கல் மனதை உருக்கும் சக்தி கொண்ட தெய்வ நூல்."

இவ்வாறு கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறினார்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. வி. சி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் குன்றக்குடி அடிகளார் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது:

மனம் ஒருமைப்பாடடைந்தால் இல்லற வாழ்க்கை செழிக்கும். மனதைச் சிதறவிடக் கூடாது. மாணிக்கவாசகர் என்னும் வண்டு ஒரு கனியிலேயே தேனையுண்டது. சிவபெருமான் பாதமலரே அது. அப்படியே நாமும் பல தெய்வ வழிபாடுகளைவிட்டு தெய்வ வழிபாட்டைக் கைக்கொள்ள வேண்டும். உலகம் ஒரு தெய்வ வழிபாட்டிற்கு இன்னும் வராதது கவலைக்குரியது.

கோவில்களில் வேதம் ஓதுதல் தமிழில் நடைபெற வேண்டுமென்று கூறுவது புரட்சியல்ல. நான் புரட்சி தெரியாத மந்தாம் பசலி. சுந்தரர் தமிழ்ப் பாடலுக்கு இறைவன் தூது சென்றார். சேக்கிழார் கூட தமிழ்ப் பாடலே இறைவனுக்குகந்தது என்கிறார். அதையே நான் திருப்பிக் கூறுகிறேன்.

பெருமையோடு வாழ்ந்த தமிழினம் இன்று பெருமை குன்றி நசுக்கப்பட்டு வருகிறது. உலகில் ஒற்றுமையற்ற சிதறிவாழும் ஓர் இனம் தமிழினம். இன, மத வேறுபாடுகளைமறந்து ஒற்றுமைப்பட்டு வாழ்வதே தமிழினம் முன்னேற ஒரேவழி.

வினைகள் இறைவனால் படைக்கப்படுவதில்லை. பழ பழவினை என்பதும் இல்லை. நாம் நேற்றுச் செய்த வினையே நாளை பிரதிபலிக்கிறது.

கடல் காற்றைச் சுவாசிக்கிறோம். அதனால் கடலுக்கோ, காற்றுக்கோ பெருமையில்லை. நமக்கே பயன். அப்படியே இறை வழிபாட்டில் நாமே நம்முடைய உள்ளத்தைப் பண்படுத்திக் கொள்ளுகிறோம். இதனால் இறைவனுக்குப் பெருமையில்லை.

நாம் இறைவனிடம் நம்மை ஒப்புக்கொடுத்தால் அவன் கஷ்டத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ளுவார். எல்லாம் இறைவன் விட்ட வழியென வாழாது ஒருவழி பற்றியே, ஒருதெய்வ வழி பற்றியே வாழ வேண்டும்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. வி. சி. சிவலிங்கம் பேசுகையில் "குன்றக்குடி அடிகளார் ஒரு புரட்சி வாதி தமிழர் வாழ வேண்டும், சைவம் வளர வேண்டும் என்னும் ஆசைகொண்டு புதிய முறையில் புரட்சி செய்கின்றார் என்றார்.

(ந. நி)

## சாவகச்சேரி ப.ச. தலைவர் நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு சாதகமாக 7 வாக்குகளும் எதிராக 8 வாக்குகளும் கிடைத்ததும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது.

முன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைக்காததைத் தொடர்ந்தே நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்ததாக கூட்டத்துக்கு தலைமை வகித்த யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தெரிவித்தார்.

## கந்தசஷ்டி

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில், சித்திர வேலாயுத சுவாமி கோவில் முதலியவற்றில் இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் கந்த ஷஷ்டி விழாவை வழமை போல சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## இலவச வெளியீடு

யாழ்ப்பாணம், சனி

எதிர்வரும் கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு 'கந்தர் சஷ்டி கவசம்' என்னும் நூலை மில்க்வைற் நிறுவனத்தார் தமது ஸ்தாபனத்திலும், விற்பனை வேன்களிலும் இலவசமாக விநியோகம் செய்கின்றனர்.

## வருங்கால...

1-ம் பக்கத் தொடர்ச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது திருமதி ஜாக்குலின் மறுமணம் செய்யவிருக்கும் கிரேக்க செல்வந்தருக்கு ஏழு பாஷைகள் தெரியும். திரு. கென்னடி உயிருடன் இருக்கும்போது திருமதி ஜாக்குலினை ஒரு தடவை சந்தித்தாராம்.

திரு. கென்னடியின் இரு நிர்வாகத்திலும் கலந்து கொண்ட திரு. அரிஸ்டோட்டல் சமீபத்தில் ஒரு விருந்து பசாரத்தில் திருமதி ஜாக்குலினை மீண்டும் சந்தித்தாராம். தமது மனைவியை விவாகரத்துச் செய்து கொண்ட திரு. அரிஸ்டோட்டல் கலைத்துறைகளிலும் பெயர்பெற்றவராம்.

மறுமணம் பற்றிய அறிவிப்பு வெளிவந்ததைத் தொடர்ந்து திருமதி ஜாக்குலின் தமது இரண்டு குழந்தைகளுடன் விசேஷ விமானத்தில் கிரேக்க தலைநகர் அதென்சுக்குப் பிரயாணமானார்.

[5ம் கலத் தொடர்ச்சி]

முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொலிஸ் கான்ஸ்டபிள் நேர்முகப் பரீட்சையிலேயே இது நடைபெற்றது. இதற்குச் சென்ற சுமார் 400 வாலிபர்களே இந்த ஏமாற்றத்துக்குள்ளானவர்களாவர்.

வழக்கம் போல பொது அறிவுக் கேள்விகளுக்கான பதில்களைத் தயார் படுத்திச் சென்ற இந்த வாலிபர்களை கல்வி, விஞ்ஞானம், விளையாட்டு சம்பந்தப்பட்ட பாடசாலைப் பரீட்சை வினாக்களைக் கேட்டு பொலிஸ் அதிகாரிகள் திணறடிக்கச் செய்து விட்டார்களாம்.

பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் [illegible] து.

[கா. நி]

இருவிதிகள் தவிர

## அவசரகால சட்டம் வாபஸ்

கொழும்பு, வெள்ளி

இரண்டு விதிகள் தவிர அவசரகாலச் சட்டத்தின் இதர விதிகள் யாவும் நேற்றிரவு வாபஸ்பெறப்பட்டன.

கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமாக நடவடிக்கைஎடுப்பதற்கு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சம்பந்தமான விதியும் நாணயமதிப்புக் குறைப்பு காரணமாக தனியார் துறை ஊழியருக்கும் விசேஷ அலவன்ஸ் வழங்க நிர்ப்பந்திக்கும் விதியும் தான் இப்பொழுதும் அமுலிலுள்ளது. இந்த இரண்டு அம்சங்கள் சம்பந்தமான சட்டம் நிறைவேற்றப்பட்டதும் அவசரகால சட்ட விதிகள் முற்றாக வாபஸ் பெறப்பட்டுவிடும்.

நேற்றிரவு வெளியான கஸட் அறிவித்தலின் பிரகாரம் கட்டளைகள், வாசகங்கள், பத்திரிகைத் தணிக்கை விதிகள் முதலிய சகல அவசரகால விதிகளும் நீக்கப்பட்டுவிட்டன.

## டிராக்டரிலிருந்து குப்புற விழுந்தமூவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், சனி

'டிராக்டர்' ஓடிக் கொண்டிருந்தது. அதன் சாரதிக்குத் தெரியாமலேயே அதனுடன் பொருத்தப்பட்டிருந்த பெட்டி கழன்று விழுந்ததால் அதற்குள்ளிருந்த மூவர் தலைகுப்புற நிலத்தில் விழுந்தார்கள்.

இச்சம்பவம் நேற்று மாலை வேலணையில் நடைபெற்றது. நிலத்தில் விழுந்து காயமடைந்தவர்களான கணபதிப்பிள்ளை, தர்மலிங்கம், கனகரத்தினம் ஆகிய மூவரும் இப்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ட்ராக்டர் பெட்டியின் ஒரு சில்லு கழன்று விழுந்ததாலேயே மூவரும் நிலத்தில் விழ நேரிட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களில் ஒருவரான தர்மலிங்கம் அபாயகரமான நிலையிலிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

தேறாவெளியாப் பகுதியிலும் நடைபெற்ற மற்றொரு டிராக்டர் விபத்தில் காயமடைந்த சின்னத்துரை என்பவரும் கடந்த இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஈ. நி)

## எங்கு பல்கலைக்கழகம் அமைப்பது? — தீர்மானம் இல்லை என்கிறார் மலலசேகரா

கொழும்பு, வெள்ளி

திருக்கோணமலையிலோ, யாழ்ப்பாணத்திலோ பல்கலைக் கழகம் அமைப்பதென்று தேசிய உயர்கல்விச் சபையோ, கல்வி அமைச்சோ எதுவித தீர்மானமும் செய்யவில்லை என்று தேசிய உயர் கல்விச்சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா தெரிவித்திருக்கிறார்.

திருக்கோணமலையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாகவும் இதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளுக்கு டாக்டர் மலலசேகரா மறுப்புத் தெரிவித்தார்.

திருக்கோணமலையிலோ யாழ்ப்பாணத்திலோ ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவது பற்றி தேசிய உயர் கல்விச் சபை ஆராயவில்லை, கல்வி அமைச்சு இது பற்றி ஆலோசனை கேட்கவுமில்லை தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவுமில்லை என்று டாக்டர் மலலசேகரா சொன்னார்.

கொழும்பு, பேராதனை பல்கலைக் கழகங்களிலும் வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களிலும் நிலவும் இடநெருக்கடி காரணமாக மற்றொரு புதிய பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டியது அவசியமென கல்வி அமைச்சரும் தேசிய உயர் கல்விச் சபையும் ஒருமித்த கருத்துக்கொண்டிருப்பதாகவும் டாக்டர் மலலசேகரா கூறினார்.

## கராம்புமூடைகள் பிடிபட்டன

அளவெட்டி, வெள்ளி

பருத்தித்துறையில் பத்தாயிரம் ரூபா பெறுமதியான கராம்பு மூடைகளைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனராம்.

இக்கராம்பு மூடைகள் கடத்திச் செல்வதற்காக லொறியொன்றில் ஏற்றிச் செல்லுகையில் பருத்தித்துறைப் பொலிசார் கைப்பற்றினரெனக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக ஒரு நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் கான்ஸ்டபிள் நேர்முக பரீட்சை:

## கல்வி விஞ்ஞான கேள்விகளை கேட்டு திணறவைத்தனர்

யாழ்ப்பாணம் சனி

கடந்த முறையும் பொது அறிவுக் கேள்விகள் தான் கேட்கப்படலாமென்று ஆயத்தமாகச் சென்ற இளைஞர்களுக்கு அதிர்ச்சி ஏமாற்றம்தான் கிடைத்தது. இதற்குப் பதிலாக பொலிஸ் அதிகாரிகள் இம்முறை தமது கவனத்தை கல்வி சம்பந்தப்பட்ட கேள்விகளில் செலுத்தினர்களாம்.

இம் மாதம் 15-ம் திகதி

[4ம் கலம்பார்க்க]

தேவை

'பைண்டிங்', 'நம்பறிங்' இல் அனுபவமுள்ள பைண்டர்கள் தேவை. இருபாலாரும் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

'ஈழநாடு',
யாழ்ப்பாணம்.

1020

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதியில் [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968 அக்டோபர் மாதம் 19ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org